# ADM COURT, SANKARANKOVIL

## தேதி 20.01.2026

## அசல் வழக்கு எண். 255/2013

பி.வா.சா.1 (முத்தாத்தாள்) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது கணவர் பெயர் பூலுடையார் என்ற துரை என்றால் சரிதான். எனது கணவர், சிவனய்யா (2ம் பிரதிவாதி) மற்றும் 3ம் பிரதிவாதியின் கணவரான ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். மேற்படி ராமகிருஷ்ணன் என்ற நபருக்கு அவரது மனைவி மருதாத்தாள் மற்றும் அவரது மக்கள் கார்த்திகாதேவி, காயத்ரி, அசோக்குமார் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தந்தை பெயர் காவேரி கோனார் என்ற செல்லையாகோனார் என்றால் சரிதான். மேற்படி காவேரி கோனாருக்கு நான், 1ம் வாதி மற்றும் சிவனாத்தாள் ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான்.

2. பிராது தபசில் சொத்து எனது தந்தைக்கு அவரது தாயார் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் சரிதான். மேற்படி பிராது த பசில் சொத்துக்களுள் புல எண்.83/1ல் 2 ஏக்கர் 58 சென்ட் இடத்தில் பிரிவின்றி 1 ஏக்கர் 72 சென்டை 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதியின் கணவர் ராமகிருஷ்ணனுக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். (அதன்பிறகு சாட்சி தாமாக முன்வந்து தான் கிரையம் கொடுக்கவில்லை என்றும், கிரையத்தொகை எதுவும் பெறவில்லை என்றும், சிவனய்யா மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோருக்கு பங்கு கொடுத்ததாகவும் கூறினார்). 1993ம் வருடம் சிவனய்யா மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோரிடமிருந்து ரூ.38,350/– யை கிரையத் தொகையாக பெற்று கிரைய ஆவணம் பிறப்பித்துக் கொடுத்தேன் என்றாலும், அவ்வாறு கிரைய ஆவணம் பிறப்பித்துக்கொடுக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கிரையத்தொகையை நான் பெறவில்லை. நான் சிவனய்யாமற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் பெயருக்கு பத்திரம் பிறப்பித்துகொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவர்களுக்கு பங்குதான் கொடுத்தேன். கிரையப்பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை. கிரையம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் சொத்து எனது தந்தை மூலம் நான் பெற்ற சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தை என்னிடம் சண்டையிட்டு சிவனய்யா மற்றும்

ராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கு பெற்றார்கள். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் எனது நிரூபண உறுதிக்கூற்றில் சிவனய்யா மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் என்னிடம் சண்டையிட்டு தாவா சொத்தை பங்கு பெற்றார்கள் என்ற விபரத்தையும், நான் அவர்களுக்கு கிரையம் எழுதிக் கொடுக்கவில்லை என்ற விபரத்தை கூறியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

3. எனக்கு படிப்பறிவு உண்டா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 கூட்டுப்பட்டாவில் சிவனய்யா மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் பெயர்கள் இடம்பெற்றுள்ளன என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட செல்லையாக்கோனார் எனது தந்தை என்றால் சரிதான். எனது தந்தையின் அப்பாபெயரும் காவேரிகோனார் என்றால் சரிதான். எனது தந்தையின் தாயார் பெயர் கோட்டிமுத்து என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களில் உள்ள சொத்துக்கள் எனது தந்தையுடையது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் இன்றளவும் எங்கள் குடும்பத்தின்வசம் உள்ளது என்றால் சரிதான்.

4. தாவா சொத்தில் உள்ள இடங்களை 10 நபர்களுக்கு மேல் நான் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் கிணறு வெட்டுவதற்காக அரசிடமிருந்து எனது தந்தை கடன்பெற்றிருந்தார் என்றால் சரிதான். எனது தந்தை வீரிருப்பு கிராமத்தின் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் சரிதான். தபசில் 1ம் அயிட்ட சொத்தில் கிணறு வெட்டுவதற்கு அரசிடமிருந்து எனது தந்தை கிரையம் பெற்று அந்த சொத்தின் வடகடைசியில் கிணறு வெட்டினார் என்றால் சரிதான். வடகடைசியில் வெட்டப்பட்ட அந்த கிணறு தற்போது தூர்ந்துவிட்டதா என்றால் இல்லை. தென்கடைசியில் உள்ள கிணறுதான் மூடப்பட்டது. தபசில் 1ம் அயிட்ட சொத்தில் தென்கடைசியில் உள்ள கிணறை வெட்டுவதற்குதான் எனது தந்தை அரசிடமிருந்து கடன் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி கடனை திரும்ப செலுத்தாததால் அந்த இடத்தை அரசு கைப்பற்றி அனாதீன சொத்தாக வகைப்பாடு செய்தது என்றால் சரிதான். அந்த இடத்திற்கான கடனை நான் திரும்ப செலுத்தி எனது பெயரில் ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கடனை நான் மட்டும் திரும்ப செலுத்தினேன் என்றாலும், அந்த கடனை அடைப்பதற்கு எனது சகோதரிகள் எனக்கு உதவவில்லை என்றாலும் சரிதான்.

5. தபசில் 1ம் அயிட்ட சொத்தில் சிவனய்யா மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் பல நபர்களுக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை தவிர்த்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்கள் எங்கள் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். 1ம் வாதி வேலம்மாள் துரைச்சாமியாபுரத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வேலம்மாளுக்கு தற்போது சுமார் 75 வயது இருக்கும் என்றால் சரிதான். வேலம்மாள் திருமணம் செய்த சமயத்தில் அவருக்கு சுமார் 20 வயது இருக்குமா என்றால் இருக்கும். திருமணம் நடைபெற்றதிலிருந்து 1ம் வாதி அவரது கணவருடன் துரைச்சாமியாபுரத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது சகோதரி சிவனாத்தாள் திருமணத்திற்கு பிறகு எங்கள் ஊரில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். சிவனாத்தாளின் கணவர் பெயர் என்னவென்றால் அருணாச்சலம். சிவனாத்தாளின் கணவர் தற்போது எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சிவனாத்தாளுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன் உள்ளார். அவர் பெயர் அருணாச்சலம். இவ்வழக்கின் 2ம் வாதிதான் மேற்படி அருணாச்சலம் என்றால் சரிதான். சிவனாத்தாளுக்கு ராமச்சந்திரன் என்ற ஒரு மகனும் உண்டு என்றால் சரிதான்.

**2,3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**